மதிப்பிடப்பெற்றது

# திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களின் முதல் உரையாசிரியர் யார்?

## Who is the Commentator of special Songs of Thirumurukatrupadai?

முனைவர் ஆ.மணி / Dr.A.Mani[1]


### Abstract

Sung at different times for each book in the Paththupattu; There are a number of special Songs that are not known who the sung is. "None of the editions so far have given text to the special Songs of Paththupattu. In this edition, the text is also standardized for special Songs of Paththupattu" (S.V. Subramanian 2003: 84). Thus, until 2003, there is no commentator of the special songs of paththupattu. It is also clear that S.V.S. who is the first commentator of special songs of paththupattu. This discourse focuses specifically on the commentaries of special songs of Thirumurukatruppadai.

It amazes us to say that no one has written for Thirumurukatruppadai Venpas for more than 150 years. So, knowing the relevance of this idea, who was the first to write the text for the individual verses given in the Thirumurukaruppadi editions? Knowing that, and chronologically compiling the authors of the Thirumurukatruppadai individual venpas; the purpose of this discourse is to convey the history of the edition of the Thirumurukatruppadai individual venpas.


### உரைக்களம்

பத்துப்பாட்டில் ஒவ்வொரு நூலுக்கும் பல்வேறு காலங்களில் பாடப்பட்ட; பாடியவர் யார் என அறியப்படாத வெண்பாக்கள் பல உள்ளன. ”இதுவரை வந்துள்ள

---

[1] துணைப்பேராசிரியர் – தமிழ் & இணைத் தேர்வாணையர், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி – 605 003, பேச: 9443927141, 8248417530, மின்னஞ்சல்: manikurunthogai@gmail.com

Citation: Mani A., (November 2020), " Who is the Commentator of special Songs of Thirumurukatrupadai? (திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களின் முதல் உரையாசிரியர் யார்?)", IIETS (Inam: International E-Journal of Tamil Studies) (ISSN:2455-0531), Vol.6, Issue 24, pp.4-27.

பதிப்புக்களில் வெண்பாக்களுக்கு ஒருவரும் உரை தரவில்லை. இப்பதிப்பில் வெண்பாக்களுக்கும் உரை தரப்பெற்றுள்ளது" (ச.வே. சுப்பிரமணியன் 2003: 84) என்பர். இதன்மூலம், 2003ஆம் ஆண்டுவரை பத்துப்பாட்டு வெண்பாக்களுக்கு யாரும் உரையெழுதவில்லை என்பதும், ச.வே. சுப்பிரமணியன் உரையில் தான் முதன்முறையாக உரையெழுதப்பட்டுள்ளது என்பதும் புலனாகின்றன. இவ்வுரை குறிப்பாகப் பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையின் வெண்பா உரைகள் பற்றிக் கவனம் செலுத்துகின்றது.

கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் பார்க்கும்போது (கையெழுத்தில் உள்ள இலக்குமணன் பதிப்பை நீக்கிவிட்டுப் பார்த்தால்) 1853இல் வந்த ஆறுமுக நாவலர் பதிப்பில்தான் (அச்சில்) முதன்முறையாக வெண்பாக்கள் இடம்பெறுகின்றன என்பதை அறிய முடிகின்றது. அப்பதிப்பிலும், இலக்குமணன் பதிப்பில் உள்ள அதே ஏழு வெண்பாக்களே உள்ளன என்பதும் நினையத்தகும். (விரிவுக்கு: ஆ. மணி பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பதிப்புக்களில் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்கள், கட்டுரைப்படி). ஆக, 150 ஆண்டுகளுக்கும் மேலாகத் திருமுருகாற்றுப்படை வெண்பாக்களுக்கு யாரும் உரையெழுதவில்லை என்று கூறுவது வியப்பை ஏற்படுத்துகின்றது. எனவே, இக்கருத்தின் பொருத்தத்தை அறிவதோடு, திருமுருகாற்றுப்படைப் பதிப்புக்களில் தரப்பட்டுள்ள தனி வெண்பாக்களுக்கு முதன்முதலில் உரையெழுதியவர் யார்? என்பதை அறிவதும், திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களுக்கு உரையெழுதியவர்களைக் காலவரிசையில் தொகுத்துக் காட்டுவதும்; அதன்வழித் திருமுருகாற்றுப்படைத் தனிவெண்பாக்களின் பதிப்பு வரலாற்றை உணர்த்துவதும் இவ்வுரையின் நோக்கமாகும். இம்முயற்சிக்குத் திருமுருகாற்றுப்படைப் பதிப்புக்களும், பத்துப்பாட்டுப் பதிப்புக்களும் அவை பற்றிய ஆய்வுகளும் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**Keywords:** Paththupattu, Thirumurukatruppadai, special Songs, பத்துப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, தனி வெண்பாக்கள்

**திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்கள்: பதிப்புக்களும் உரைகளும்**

திருமுருகாற்றுப்படை மட்டும் உள்ள ஓலைச்சுவடிகளில் மட்டும் இருந்த தனி வெண்பாக்கள், திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்வோரால் இணைத்து ஓதப்பட்டு வந்தன. எனவே, திருமுருகாற்றுப்படையைப் பதிப்பித்தவர்களும் அவற்றைத் தம் பதிப்புக்களில் இணைத்துத் தரத் தொடங்கினர். தற்போது அறிந்த வரையில் 1853இல் தொடங்கிய திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களின் பதிப்புப்பணியால், அவை பற்றிய சிந்தனைகள் மக்களிடம் பரவத் தொடங்கின.

காலப்போக்கில் அவற்றுக்கும் உரை தேவை என்ற எண்ணமும் உரையாசிரியர் / பதிப்பாசிரியர் / கற்போரிடையில் தோன்றியிருக்க வேண்டும். அதன் விளைவாகத் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களுக்கு உரையெழுதும் முயற்சிகள் தொடங்கியிருக்க வேண்டும் என்றே தோன்றுகின்றது.

அ. அமிர்தலிங்கம் (2000: 360 – 363) பத்துப்பாட்டுப் பதிப்புக்கள் என 11 பதிப்புக்களையும், திருமுருகாற்றுப்படைப் பதிப்புக்கள் என 62 பதிப்புக்களையும் சுட்டியுள்ளார். திருமுருகாற்றுப்படையைப் பதிப்பித்த சாமி. சிவஞானம் (2003: 311 - 316) திருமுருகாற்றுப்படைப் பதிப்புக்களாக 57 பதிப்புக்களைக் (பத்துப்பாட்டு உட்பட) குறித்துள்ளார். தி. மகாலட்சுமி (ச. சிவகாமி 2009: 400 - 402) திருமுருகாற்றுப்படைப் பதிப்புக்கள் என 31 பதிப்புக்களையும், பத்துப்பாட்டுப் பதிப்புக்களாக 10 பதிப்புக்களையும் பட்டியலிட்டுள்ளார். இப்போது இக்கட்டுரையாளர் வசமுள்ள (2003க்குப் பின் வந்த பதிப்புக்களும் சேர்த்து, மொத்தம்) 65 பதிப்புக்களையும் (பத்துப்பாட்டு / திருமுருகாற்றுப்படை) உற்றுநோக்கியபொழுது, அவற்றுள் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்கள் 14 பதிப்புக்களில் முற்றிலுமாக இல்லை என்பதையும், தனி வெண்பாக்கள் மூலம் மட்டும் (குறைந்தபட்சம் 7, அதிகபட்சம் 10 வெண்பாக்கள்) கொண்ட பதிப்புக்கள் 31 என்பதையும், 20 பதிப்புக்களில் தனி வெண்பாக்களின் மூலம், அதன் உரை ஆகியன உள்ளன என்பதையும் அறிய முடிந்தது.

### காலத்தால் முந்தைய பதிப்பு: மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பு (1910)

கிடைத்துள்ள பதிப்புக்களில் காலத்தால் முந்தைய பதிப்பாகிய மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பில், அதாவது 1910இல் வெளிவந்த பதிப்பில் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களுக்குப் பதவுரை தரப்பட்டுள்ளது. இவ்வுரையை எழுதியவர் யார்? என்பது எவ்விடத்தும் குறிக்கப்படவில்லை. திருமுருகாற்றுப்படைக்கு உரை தரப்படாதபோதும், வெண்பாக்களுக்குத் “தோத்திரப் பாக்கள் பதவுரை” எனப் பெயரிட்டு உரை தரப்பட்டிருப்பது புதுமையாகத் தோன்றுகின்றது. திருமுருகாற்றுப்படையைவிடத் தனி வெண்பாக்கள் இன்றியமையாதவை என எவ்வாறு மனோன்மணி விலாச அச்சுக்கூடத்தார் கருதினர்? எனத் தெரியவில்லை. திருமுருகாற்றுப்படை மூலத்தைப் பாராயணம் செய்வதற்கு உரை தேவையில்லை எனக் கொண்டாலும், வெண்பாக்களுக்கு உரை தர வேண்டிய தேவை என்ன? என்பதை அறிய இயலவில்லை.

பொதுவாக, பதிப்பாசிரியர் / உரையாசிரியர் பெயர் தரப்படாத பழைய பதிப்புக்களை, அவ்வப்பதிப்புக்களைப் பதிப்பித்த அச்சுக்கூடத்தார் பெயரிலேயே

குறிப்பது தமிழாய்வுலகின் வழக்கம். அவ்வகையில், இப்பதிப்பும் உரையும் மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பு என்றும், மனோன்மணி விலாச அச்சுக்கூட உரை என்றும் இவண் குறிக்கப்பட்டுள்ளன. தற்போது கிடைத்தவரையில் இவ்வுரையே காலத்தால் முந்தைய உரையாகத் தோன்றுகின்றது. பொதுவாக, முதன்முறை உரையெழுதுவோர், அவ்வுரை முதன்முறையாக எழுதப்பட்டுள்ளது என்ற செய்தியை நூலில் குறிப்பிடுவதைத் தமிழ்ப் பதிப்புக்கள் காட்டுகின்றன. மனோன்மணி விலாச அச்சுக்கூடப்பதிப்பில் அவ்வகைக் குறிப்புக்கள் எவையும் இல்லை என்பதால், இவ்வுரையைத் திருமுருகாற்றுப்படை வெண்பாக்களின் முதல் உரை எனக் கருதவும்; உறுதிப்படுத்தவும் இயலவில்லை. இதற்கு முந்தைய உரைகள் ஏதேனும் உண்டா? என்பதும் தற்போது தெரியவில்லை. அதனை உரிய தரவுகள் கிடைக்குமிடத்தில் உரைக்கலாம் என்று மட்டுமே தற்போது அமைதி கூற முடிகின்றது.

### அடுத்த பதிப்பு: பூமகள் விலாச அச்சுக்கூடப் பதிப்பு (1922)

மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பு, 1922இல் பூமகள் விலாச அச்சுக்கூடப் பதிப்பாக வெளிவந்துள்ளது அறியத்தக்க உண்மையாகும். மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பில் உள்ளதுபோன்றே திருமுருகாற்றுப்படை மூலமும், தோத்திரப் பாக்களுக்கான பதவுரையும் இப்பதிப்பிலும் தரப்பெற்றுள்ளன. ஒரோவழி, இப்பதிப்பையும் முன்னைய பெயரிலேயே (மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பு) அழைக்கலாம். எனினும், அப்பதிப்புக்கு முன்னைய பதிப்பும் உண்டா? என்ற வினாவுக்கு விடை கிடைக்காத காரணத்தால், இப்பதிப்பைப் பூமகள் விலாச அச்சுக்கூடப் பதிப்பு என்றே அழைக்க வேண்டியுள்ளது. எனினும், தம் பதிப்புக்கு மூலமாக அமைந்த மனோன்மணி விலாசப் பதிப்பைக் குறிக்காதது பதிப்பறமாகத் தெரியவில்லை.

பூமகள் விலாச அச்சுக்கூடப் பதிப்பிலும், அதாவது 1922இல் வெளிவந்த பதிப்பில் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களுக்குப் பதவுரை தரப்பட்டுள்ளது. இவ்வுரையை எழுதியவர் யார்? என்பது எவ்விடத்தும் குறிக்கப்படவில்லை. திருமுருகாற்றுப்படைக்கு உரை தரப்படாதபோதும், வெண்பாக்களுக்குத் "தோத்திரப் பாக்கள் பதவுரை" எனப் பெயரிட்டு உரை தரப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படையை விடத் தனி வெண்பாக்கள் இன்றியமையாதவை எனப் பூமகள் விலாச அச்சுக்கூடத்தாரும் எவ்வாறு கருதினர் எனத் தெரியவில்லை. இப்பதிப்பிலும் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களுக்கு உரை தரப்பட்டுள்ளது நினையத்தக்க உண்மையாகும்.

### கோ. வடிவேலு செட்டியார் உரை (1924)

நான்முகப்பு முதலியன கிட்டாத திருமுருகாற்றுப்படை பரிமேலழகர் உரையின் பதிப்பு ஒன்று கிட்டியுள்ளது. அதிலும் நூலுள்ளே சில பக்கங்கள் காணாமல் போயுள்ளன. இருக்கின்ற பக்கங்களின் துணை கொண்டு, இப்பதிப்பினைப் பற்றிய செய்திகளை இவண் தரலாம். முதல்பதிப்பின் முகவுரையில் இறுதி மூன்று பக்கங்கள் மட்டுமே உள்ளன. அவற்றின் மூலம், பரிமேலழகர் உரை முன்னரே பதிப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அப்பதிப்பில் பதவுரை, விளக்கவுரை வேறுபாடில்லாமல் இருந்ததனால், அதனை மாற்றிப் புதிய முறையில் பதிப்பிக்கக் கருதிய தம் நண்பராகிய சை. இரத்தினச் செட்டியாரின் மகன் சை.ந.பாலசுந்தரம் செட்டியார் கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பதவுரை, விளக்கவுரை ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டி அ.மஹாதேவ செட்டியார் தந்தார். இதனை, "மேற்காட்டிய நூல் முழுவதையும், பழைய உரையையே பலரும் சிரமமின்றி வாசித்துக் கொள்ளுதற்பொருட்டுப் புதிய முறையில் அமைத்து எழுதியிருக்கின்றேன்.

திருமுருகாற்றுப்படை உரையை, இதுவரையில் இந்தவிதமான அமைப்பில், எவரும் பதிப்பிக்கவில்லை. இந்தவிதமான அமைப்பில், இந்நூல் வெளிவருவது இதுதான் முதன்முறையாகும்" (சை.ந. நமச்சிவாய ராஜயோகியார் 1938:11) என வரும் அ.மஹாதேவ செட்டியார் எழுதிய முகவுரை உணர்த்துகின்றது. இம்முகவுரை 7–4-1924இல் எழுதப்பட்டது என்பதை அம்முகவுரையின் இறுதியில் உள்ள நாள்வரிக் குறிப்புக் காட்டுகின்றது. இப்பதிப்பினைச் சை.ந. பாலசுந்தரம் செட்டியார் 1924இல் பதிப்பித்து வெளியிட்டார் என்று கருதலாம்.

திருமுருகாற்றுப்படைப் பரிமேலழகர் உரையின் இரண்டாம் பதிப்பு சை.ந.நமச்சிவாய ராஜயோகியார் எழுதிய திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியும் ஆறுபடை வீடுகளின் விளக்கமும் (நாள் வரிக்குறிப்பு நாள்: 14–5 –1938) சேர்த்து வெளியிடப்பட்டது. இவ்விரண்டாம் பதிப்பின் நான்முகம் சை.ந. நமச்சிவாய ராஜயோகியாரால் எழுதப்பட்டது. இதில், பரிமேலழகர் உரையின் சுவடியைத் தந்தவர் கோ. வடிவேலு செட்டியார் என்பதும், முதல் பதிப்புக் காலத்தில் கிடைக்காத பரிமேலழகர் உரைப்பகுதி (திருமு. 292 – 317), தற்போது தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை உதவியால் கிடைத்திருப்பதாகவும், அப்பகுதி இப்பதிப்பில் இணைக்கப்பட்டிருப்பதாகவும், இப்பதிப்பில் புதிதாக ஆறுபடை வீட்டுத் துதிகளின் விளக்கம் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் குறித்துள்ளார் (சை.ந. நமச்சிவாய ராஜயோகியார் 1938:12-13). இதன்மூலம், இரண்டாம் பதிப்பில் உள்ள தோத்திரப் பாக்களின் உரை முதற்பதிப்பிலும் இருந்ததே எனக் கருதலாம். இக்கருத்து மெய்ம்மையானால்,

தோத்திரப் பாக்களின் உரை எழுதப்பட்டது 1924 எனக் கொள்ளலாம். அதனடிப்படையிலேயே இவண் உரையின் ஆண்டு 1924 எனக் குறிக்கப்பட்டுள்ளது. தோத்திரப்பாக்களின் உரை கோ.வடிவேலு செட்டியார் எழுதியதாகும். இதனை, “தோத்திரப்பாக்கள் மூலமும், இலக்கண இலக்கிய தருக்க, வேதாந்த போதகாசிரியரும், சென்னை ஹிந்து தியாலாஜிகல் உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்புலவருமான [ஆசிரியர் சாது. கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் இயற்றிய உரையும்]” (சை.ந. நமச்சிவாய ராஜயோகியார் 1938: 130). என வரும் பகுதியால் உணரலாம். இதன்மூலம், (தற்போது அறிந்தவரையில்) உரையாசிரியர் பெயர் அறியப்பட்ட திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களின் முதல் உரையென இதனைக் கூறலாம். இவ்வுரை, பதவுரையும் விளக்கவுரையும் கொண்டதாகும்.

**ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை உரை (1933)**

திருமுருகாற்றுப்படைக்குத் ”திரிசிரபுரம் செண்ட் ஜோசப்ஸ் காலேஜ் தமிழாசிரிய”ராக இருந்த ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை எழுதிய விருத்தியுரை 1933இல் வெளிவந்தது. அவ்வுரை, சென்னை: பூமகள் விலாச அச்சுக்கூடத் தலைவராகிய அ. முத்து வடிவேல் முதலியாரால், அவ்வச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. 12 அணா விலையில் வந்த அப்பதிப்பில் தோத்திரப் பாக்களுக்குப் பதவுரையும், விருத்தியுரையும் ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளையால் எழுதப்பட்டுள்ளன.

**கி.வா. ஜகந்நாதன் உரை (1947, 1949)**

கி.வா.ஜகந்நாதன் 1947ஆம் ஆண்டு வழிகாட்டி என்னும் பெயரிய நூலொன்றைச் சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி வெளியீடாக; முதற்பதிப்பாகத் தந்தார். அதன் ஆறாம் பதிப்பு 1998லும், ஏழாம் பதிப்பு 2004லும் வெளிவந்தன. அதில், வெண்பாக்களும், அவற்றின் பொழிப்புரையும் இடம்பெற்றுள்ளன.

1949இல் சென்னை, சைவ பக்த ஜன சபையார் நடத்திய திருமுருகாற்றுப்படை வகுப்புக்களில் கி.வா. ஜகந்நாதன் கூறிய உரையை, அதே சபையார் 1949இலேயே ”திருமுருகாற்றுப்படை திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள் எழுதிய பொழிப்புரையுடன்” என்னும் பெயரில் பதிப்பித்து வெளியிட்டனர். அப்பதிப்பில், 1947 பதிப்பில் உள்ளதுபோல வெண்பாக்களும் பொழிப்புரையும் இடம்பெற்றுள்ளன.

**மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை உரை (1955)**

1955ஆம் ஆண்டு நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை என்னும் பெயரிய பதிப்பொன்று கொழும்பு, சரஸ்வதி புத்தகசாலையால் வெளியிடப்பட்டுள்ளது. இதன்

தொகுப்பாளர் ஸ்ரீமதி சிவானந்தம் தம்பையா ஆவார். பதிப்பாசிரியர் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை ஆவார். இதன் பதவுரை மே.வீ. வேணுகோபாலப்பிள்ளையால் எழுதப்பட்டது என்பதை "இதனை (திருமுருகாற்றுப்படையை) அனைவரும் பொருளுடன் ஓதி உணர்தல் நலமெனக் கருதித் தெளிவான பதவுரையுடனும் பொருளகராதி அருஞ்சொல் அகராதிகளுடனும் வெளியிடலாயிற்று" (மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை 1955:V) என வரும் பகுதி உணர்த்துகின்றது. இப்பதிப்பின் பிற்சேர்க்கையில் நேரிசை வெண்பா என்னும் தலைப்பில் வெண்பாக்களுக்குப் பதவுரை தரப்பட்டுள்ளது.

**சி. ஜெகந்நாதாசாரியர் உரை (1961)**

திருமுருகாற்றுப்படைக்கு வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார் ஆராய்ச்சியுரை ஒன்றை எழுதி வெளியிட்டார். அதன் முதற்பதிப்பு வெளிவந்த ஆண்டு தெரியவில்லை. எனினும், அதன் மூன்றாம் பதிப்பு 1951இல் ஆனந்த பார்வதி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. அதில் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்கள் மட்டும் "முருகப்பிரானைப் பற்றிய விடுபாடல்கள்" என்னும் தலைப்பில் தரப்பட்டுள்ளன. ஆனால், உரை இல்லை.

வை.மு.கோ. உரை எழுதிய பத்துப்பாட்டுப் பாடல்களும், அவர்தம் மாணவர் சி. ஜெகந்நாதாசாரியர் எழுதிய பத்துப்பாட்டு உரைகளும் ஒரே தொகுப்பாக 1961இல் வை.மு. நரசிம்மனால் வெளியிடப்பட்டது. இப்பதிப்பு பற்றிய இக்கட்டுரையாளரின் கருத்து வருமாறு: "பத்துப்பாட்டு நூல்களில் மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம் ஆகிய மூன்று நீங்கலான ஏழு நூல்களுக்கு வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியர் (வை.மு.கோ) உரையெழுதி வெளியிட்டார். நச்சினார்க்கினியர் உரையை அடிப்படையாகக் கொண்டு எளிமையாகவும் கூடுதல் விளக்கங்களுடனும் வை.மு.கோ. உரை அமைந்தது. வை.மு.கோ. உரையெழுதாத மூன்று நூல்களுக்கும் உரையெழுதிப் பத்துப்பாட்டு உரையை நிறைவு செய்ய வேண்டுமென்ற விருப்பமுடையவராக வை.மு.கோ.வின் மாணவரும் மயிலை விவேகாநந்தர் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவருமாகிய சி. ஜெகந்நாதாசாரியர் இருப்பதை அறிந்த வை.மு.கோ.வின் மகன் வை.மு. நரசிம்மன் (பொறியியல் வல்லுநர்) ஜெகந்நாதாசாரியரை உரையெழுதும்படி ஊக்கப்படுத்தினார். அதன் பயனாகக் குறிஞ்சிப்பாட்டு, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் ஆகியவை உரையுடன் வெளிவந்தன. இவ்வுரைகளும் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியே எழுதப்பட்டுள்ளன. மேலும், நச்சினார்க்கினியர் உரைப்போக்கின் அழகையும் இவ்வுரைகள் தெளிவுறுத்தும் என்கின்றார் சி. ஜெகந்நாதாசாரியர் (1961: ப.எ.இ.).

வை.மு.கோ. உரையெழுதாத நூல்களை நோக்கும்பொழுது பத்துப்பாட்டு மரபு வரிசையில் ஆறாம் நூலாக அமையும் மதுரைக்காஞ்சி, எட்டாம் நூலாகிய குறிஞ்சிப்பாட்டு, பத்தாம் நூலாகிய மலைபடுகடாம் என்ற நிலையில் வரிசைமுறை அமைகின்றது. ஆறு, எட்டாம் நூல்களுக்கு உரையெழுதாத வை.மு.கோ. ஏழாம் நூலாகிய நெடுநல்வாடை, ஒன்பதாம் நூலாகிய பட்டினப்பாலை ஆகியவற்றுக்கு உரையெழுதியுள்ளார். மரபு வரிசையில் உரையெழுதாமல் தமக்கு விருப்பமான நூல்களுக்கு உரையெழுதினாரா? அல்லது பாடநூல்களாக அமைந்தவற்றுக்கு மாணவர்களின் தேவை கருதி உரையெழுதி வெளியிட்டாரா? என்பதைத் தற்போது அறிய இயலவில்லை. ஜெகந்நாதாசாரியரும் மரபு வரிசையில் உரையெழுதாது எட்டாம் பாட்டாகிய குறிஞ்சிப்பாட்டுக்கு முதலாவதாகவும், ஆறாம் பாட்டாகிய மதுரைக்காஞ்சிக்கு இரண்டாவதாகவும், அதன் பின்னர்ப் பத்தாம் நூலாகிய மலைபடுகடாத்திற்கும் உரையெழுதி வெளியிட்டார். இம்முறை மாற்றத்திற்குக் காரணம் ஏதேனும் உண்டா? என்பது அறிதற்பாலது. முன்னர் வெளிவந்த வை.மு.கோ. உரையொடு கூடிய பத்துப்பாட்டின் ஏழு நூல்களுக்குமான உரைகளின் பின்னர் ஜெகநாதாசாரியர் எழுதிய மூன்று நூல்களின் உரைகள் வந்தன. மலைபடுகடாம் உரை 1960இல் வெளிவந்தது. 1961இல் (14-1-1961) வை.மு.கோ., சி. ஜெகநாதாசாரியர் ஆகிய இருவர் உரைகளும் மரபு வரிசையில் அடுக்கப்பட்டு முழுமைப் பதிப்பாக வை.மு.கோ.வின் மகன் வை.மு. நரசிம்மனால் வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியர் கம்பெனி வெளியீடாக ரூ 8.50 விலையில் வெளிவந்தது. இம்முழுமைப் பதிப்பு வை.மு. நரசிம்மனால் வெளியிடப்பட்டதாகும். எனவே, இதன் பதிப்பாசிரியராக வை.மு. நரசிம்மனையே கருத வேண்டியுள்ளது. அதன் அடிப்படையிலேயே இப்பதிப்பு வரலாற்றில் அவர் பெயர் இடம்பெற்றுள்ளது. தந்தையின் உரை நிறைவுபெறாமல் நின்ற நிலையில் அவர்தம் மாணவரைக் கொண்டே அவ்வுரையை நிறைவுசெய்து வெளியிட்ட வை.மு. நரசிம்மனின் பணி தமிழுலகால் அறியப்படவேண்டிய ஒன்றாகும் என்பது ஈண்டுக் குறிக்கத்தக்கது" (ஆ. மணி 2014: 70 – 71).

வை.மு. நரசிம்மன் பதிப்பில், திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் முடிந்த பின்னர் வெண்பாக்கள் எனத் தலைப்பிட்டுப் பத்து வெண்பாக்களும், அவற்றின் உரைகளும் இடம்பெற்றுள்ளன. வெண்பாக்களின் உரையிலும் பதவுரை, விசேடவுரை ஆகியன அமைந்துள்ளன. வெண்பாக்களின் உரை, சி. ஜெகந்நாதாசாரியரால் எழுதப்பட்டது என்பதை, ".. .. பத்துப்பாட்டினுள், ஒவ்வொரு பாட்டினிறுதியிலும் காணப்படும் வெண்பாக்களுக்கும் உரையெழுதியுள்ளேன்" (வை.மு. நரசிம்மன் 1961: ப.எ.இ.) என்ற முன்னுரை உணர்த்துகின்றது. இதன்மூலம், வை.மு.கோ. திருமுருகாற்றுப்படைக்கு உரையெழுத, தனி வெண்பாக்களுக்கு அவர்தம் மாணவர்

ஜெகநாதாசாரியர் உரையெழுதியுள்ளதை அறிய முடிகின்றது. இது ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

**கி.வா. ஜகந்நாதன் உரை (1970)**

1970ஆம் ஆண்டு சென்னை, அமுத நிலைய வெளியீடாகக் கி.வா. ஜகந்நாதன் எழுதிய திருமுருகாற்றுப்படை விளக்கம் என்னும் நூல் முதற்பதிப்பாக வந்தது. அதன் இரண்டாம் பதிப்பு 1978இல் வந்தது. அப்பதிப்பில் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களுக்குப் பொழிப்புரையும் விளக்கவுரையும் இடம்பெற்றுள்ளன. 1947, 1949இல் வெண்பாக்களுக்குப் பொழிப்புரை மட்டும் எழுதிய கி.வா.ஜ., 1970இல் விளக்கவுரையும் எழுதி இணைத்துள்ளார் என்பது குறிக்கத்தக்கது.

**சு. இராஜேந்திர குருக்கள் உரை (1988)**

நக்கீர முனிவர் பாடியருளிய திருமுருகாற்றுப்படை விளக்கவுரை என்னும் பெயரிய பதிப்பொன்று 1988இல் இலங்கை, நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான வெளியீடாக வந்தது. அப்பதிப்பின் உரை சு. இராஜேந்திர குருக்களால் எழுதப்பட்டதாகும். இதில், வெண்பாக்களுக்குப் பொழிப்புரை தரப்பட்டுள்ளது.

**சாது சிதம்பரம் சுவாமி உரை (2001)**

நக்கீரர் அருளிச் செய்த திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் (தெளிபொருள்) என்னும் பெயரிய நூலொன்றைச் சாது சிதம்பரம் சுவாமிகள் 2001 இல் வெளியிட்டுள்ளார். அதில் “திருமுருகாற்றுப்படை மாலை” என்னும் தலைப்பில் வெண்பாக்களும், அவற்றின் பொழிப்புரைகளும் விளக்கங்களும் உள்ளன.

**சாமி. சிவஞானம் உரை (2003)**

நச்சினார்க்கினியர் உரையை அடிப்படையாகக் கொண்டு சாமி. சிவஞானம் எழுதிய உரை திருமுருகாற்றுப்படை உரை என்னும் பெயரில் தஞ்சாவூர், சரஸ்வதி மகால் நூல்நிலையத்தால் 2003ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதில், வெண்பாக்களுக்குப் பொழிப்புரையும், விளக்கமும் இடம்பெற்றுள்ளன.

**ஜமதக்னி உரை (?)**

திருமுருகாற்றுப்படை பொருள்விளக்கமும் விருத்தியுரையும் என்னும் பெயரிய பதிப்பு பி. இரத்தின நாயகர் ஸன்ஸ் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. ஆண்டு குறிக்கப்படாத அப்பதிப்பில், உரையாசிரியர் பெயரும் நூன்முகப்பில் குறிக்கப்படவில்லை. அப்பதிப்பில் உள்ள முகவுரையின் அடிப்படையில் ஜமதக்னி

அப்பதிப்பின் உரையாசிரியராக இவண் குறிக்கப்பட்டுள்ளார். உரை முடிந்த பின்னர்த் தோத்திரப்பா எனப் பெயரிட்டு வெண்பாக்களுக்குப் பொழிப்புரையும், விளக்கவுரையும் தந்துள்ளார். வெண்பாக்களின் உரை முடிந்த பின்னர் “திருமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை – 1. 1960” என்ற குறிப்புள்ளது. இவண் உள்ள 1960 என்பது ஆண்டா? எனத் தெரியவில்லை. ஒரு பதிப்பில் இவ்வாறு ஆண்டு குறிக்காமல் போவதன் பயன் இன்னது என்பதை அறிய இயலவில்லை.

2003க்குப் பிற்பட்ட 7 பதிப்புக்களில் வெண்பாக்களுக்கு உரை தரப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. அவற்றைப் பின்னிணைப்புகளில் கண்டுகொள்க.

இதுகாறும் கண்ட செய்திகளால், 2003ஆம் ஆண்டில் வெளிவந்த ச.வே. சுப்பிரமணியனின் உரைக்கு முன்னரே வெளிவந்துள்ள பன்னிரு பதிப்புக்களில் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களுக்குப் பதவுரை / பொழிப்புரை, விளக்கவுரை ஆகியன பல்வேறு உரையாசிரியர்களால் கூறப்பட்டுள்ள உண்மையை அறியமுடிகின்றது. எனவே, ச.வே. சுப்பிரமணியனின் கருத்து, திருமுருகாற்றுப்படை வெண்பாக்களைப் பொருத்தவரையில் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. பத்துப்பாட்டு முழுமைக்குமான வெண்பாக்களின் உரைகளில் ச.வே. சுப்பிரமணியனின் உரை முதல் உரையா? என்பது தனித்த ஆய்வுக்குரியது.

## முடிபுகள்

1. இப்போது இக்கட்டுரையாளரின் கைவசமுள்ள (2003க்குப் பின் வந்த பதிப்புக்களும் சேர்த்து, மொத்தம்) 65 பதிப்புக்களையும் (பத்துப்பாட்டு / திருமுருகாற்றுப்படை) உற்றுநோக்கியபொழுது, அவற்றுள் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்கள் 14 பதிப்புக்களில் முற்றிலுமாக இல்லை என்பதையும், தனி வெண்பாக்கள் மூலம் மட்டும் (குறைந்தபட்சம் 7, அதிகபட்சம் 10 வெண்பாக்கள்) கொண்ட பதிப்புக்கள் 31 என்பதையும், 20 பதிப்புக்களில் தனி வெண்பாக்களின் மூலம், அதன் உரை ஆகியன உள்ளன என்பதையும் அறிய முடிந்தது.
2. கிடைத்துள்ள பதிப்புக்களில் காலத்தால் முந்தைய பதிப்பாகிய மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பில், அதாவது 1910இல் வெளிவந்த பதிப்பில் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களுக்குப் பதவுரை தரப்பட்டுள்ளது. இவ்வுரையை எழுதியவர் யார்? என்பது எவ்விடத்தும் குறிக்கப்படவில்லை. திருமுருகாற்றுப்படைக்கு உரை தரப்படாதபோதும், வெண்பாக்களுக்குத் “தோத்திரப் பாக்கள் பதவுரை” எனப் பெயரிட்டு உரை தரப்பட்டிருப்பது

புதுமையாகத் தோன்றுகின்றது. திருமுருகாற்றுப்படையை விடத் தனி வெண்பாக்கள் இன்றியமையாதவை என எவ்வாறு மனோன்மணி விலாச அச்சுக்கூடத்தார் கருதினர் எனத் தெரியவில்லை. திருமுருகாற்றுப்படை மூலத்தைப் பாராயணம் செய்வதற்கு உரை தேவையில்லை எனக் கொண்டாலும், வெண்பாக்களுக்கு உரை தர வேண்டிய தேவை என்ன என்பதை அறிய இயலவில்லை. பொதுவாக, பதிப்பாசிரியர் / உரையாசிரியர் பெயர் தரப்படாத பழைய பதிப்புக்களை, அவ்வப்பதிப்புக்களைப் பதிப்பித்த அச்சுக்கூடத்தார் பெயரிலேயே குறிப்பது தமிழாய்வுலகின் வழக்கம். அவ்வகையில், இப்பதிப்பும் உரையும் மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பு என்றும், மனோன்மணி விலாச அச்சுக்கூட உரை என்றும் இவண் குறிக்கப்பட்டுள்ளன. தற்போது கிடைத்தவரையில் இவ்வுரையே காலத்தால் முந்தைய உரையாகத் தோன்றுகின்றது. பொதுவாக, முதன்முறை உரையெழுதுவோர், அவ்வுரை முதன்முறையாக எழுதப்பட்டுள்ளது என்ற செய்தியை நூலில் குறிப்பிடுவதைத் தமிழ்ப் பதிப்புக்கள் காட்டுகின்றன. மனோன்மணி விலாச அச்சுக்கூடப்பதிப்பில் அவ்வகைக் குறிப்புக்கள் எவையும் இல்லை என்பதால், இவ்வுரையைத் திருமுருகாற்றுப்படை வெண்பாக்களின் முதல் உரை எனக் கருதவும்; உறுதிப்படுத்தவும் இயலவில்லை. இதற்கு முந்தைய உரைகள் ஏதேனும் உண்டா? என்பதும் தற்போது தெரியவில்லை.

3. மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பு, 1922இல் பூமகள் விலாச அச்சுக்கூடப் பதிப்பாக வெளிவந்துள்ளது அறியத்தக்க உண்மையாகும். மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பில் உள்ளதுபோன்றே, திருமுருகாற்றுப்படை மூலமும், தோத்திரப் பாக்களுக்கான பதவுரையும் இப்பதிப்பிலும் தரப்பெற்றுள்ளன. ஒரோவழி, இப்பதிப்பையும் முன்னைய பெயரிலேயே (மனோன்மணி விலாச அச்சுக்கூடப் பதிப்பு) அழைக்கலாம். எனினும், அப்பதிப்புக்கு முன்னைய பதிப்பும் உண்டா? என்ற வினாவுக்கு விடை கிடைக்காத காரணத்தால், இப்பதிப்பைப் பூமகள் விலாச அச்சுக்கூடப் பதிப்பு என்றே அழைக்க வேண்டியுள்ளது. எனினும், தம் பதிப்புக்கு மூலமாக அமைந்த மனோன்மணி விலாசப் பதிப்பைக் குறிக்காதது பதிப்பறமாகத் தெரியவில்லை.
4. பூ மகள் விலாச அச்சுக்கூடப் பதிப்பிலும், அதாவது 1922இல் வெளிவந்த பதிப்பில் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களுக்குப் பதவுரை தரப்பட்டுள்ளது.
5. சை.ந. நமச்சிவாய ராஜயோகியார் வெளியிட்ட திருமுருகாற்றுப்படை பரிமேலழகர் உரையின் இரண்டாம் பதிப்பில் உள்ள தோத்திரப் பாக்களின் உரை முதற்பதிப்பிலும் இருந்தது எனக் கருதலாம். இக்கருத்து

மெய்ம்மையானால், தோத்திரப் பாக்களின் உரை எழுதப்பட்டது 1924 எனக் கொள்ளலாம். தோத்திரப்பாக்களின் உரை கோ. வடிவேலு செட்டியார் எழுதியதாகும். இதன்மூலம், (தற்போது அறிந்தவரையில்) உரையாசிரியர் பெயர் அறியப்பட்ட திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களின் முதல் உரையென இதனைக் கூறலாம். இவ்வுரை, பதவுரையும் விளக்கவுரையும் கொண்டதாகும்.

6. ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை எழுதிய விருத்தியுரை 1933இல் வெளிவந்தது. அவ்வுரை, சென்னை: பூமகள் விலாச அச்சுக்கூடத் தலைவராகிய அ. முத்து வடிவேல் முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது. அப்பதிப்பில் தோத்திரப் பாக்களுக்குப் பதவுரையும், விருத்தியுரையும் ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளையால் எழுதப்பட்டுள்ளன.
7. கி.வா. ஜகந்நாதன் உரைப்பதிப்புகளில் (1947, 1949), வெண்பாக்கள் பொழிப்புரையுடன் இடம்பெற்றுள்ளன.
8. 1947, 1949இல் வெண்பாக்களுக்குப் பொழிப்புரை மட்டும் எழுதிய கி.வா.ஜ., 1970இல் விளக்கவுரையும் எழுதி இணைத்துள்ளார் என்பது குறிக்கத்தக்கது.
9. இராசேந்திர குருக்கள் (1988), சாது சிதம்பரம் சுவாமி (2001), சாமி. சிவஞானம் (2003), ஜமதக்னி (?) ஆகியோரும் வெண்பாக்களுக்கு உரையெழுதியுள்ளனர்.
10. 2003ஆம் ஆண்டில் வெளிவந்த ச.வே. சுப்பிரமணியனின் உரைக்கு முன்னரே வெளிவந்துள்ள பன்னிரு பதிப்புக்களில் திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களுக்குப் பதவுரை / பொழிப்புரை, விளக்கவுரை ஆகியன பல்வேறு உரையாசிரியர்களால் கூறப்பட்டுள்ள உண்மையை அறியமுடிகின்றது. எனவே, ச.வே. சுப்பிரமணியனின் கருத்து, திருமுருகாற்றுப்படை வெண்பாக்களைப் பொருத்தவரையில் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. பத்துப்பாட்டு முழுமைக்குமான வெண்பாக்களின் உரைகளில் ச.வே. சுப்பிரமணியனின் உரை முதல் உரையா? என்பது தனித்த ஆய்வுக்குரியது.

**துணைநூல்கள் - திருமுருகாற்றுப்படைப் பதிப்புக்கள்**


- அநவரத விநாயகமூர்த்தி. வை. 1978 (முதல் பதிப்பு). நக்கீரர் தந்த நன்முருகாற்றுப்படை. கொழும்பு: கல்வி அமைச்சு இந்து மன்றம்.
- ஆசிரியர் குழு (பதி.). 1983 (இரண்டாம் பதிப்பு). பத்துப்பாட்டு. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- ஆறுமுக நாவலர் (உ.ஆ.). 1853 (பிரமாதீச: ஐப்பசி – முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை. --: வித்தியாநுபாலன யந்திரசாலை.

- ஆறுமுக நாவலர் (உ.ஆ.). 1873 (ஆங்கிரஸ: பங்குனி - மூன்றாம் பதிப்பு). திருமுருகாற்றுப்படை. சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை.
- ஆறுமுக நாவலர் (உ.ஆ.). 1886 (விய: ஆனி - ஐந்தாம் பதிப்பு). திருமுருகாற்றுப்படை. சதாசிவப்பிள்ளை (பதி.ஆ.). சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை.
- ஆறுமுக நாவலர் (உ.ஆ.). 1917 இல் (பிங்கள: மார்கழி - 11ஆம் பதிப்பு). திருமுருகாற்றுப்படை. பொன்னம்பலப்பிள்ளை (பதி.ஆ.). சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை.
- ஆறுமுக நாவலர் (உ.ஆ.). 1971 (முதல் பதிப்பு). நக்கீரதேவநாயனார் அருளிச்செய்த திருமுருகாற்றுப்படை மூலமும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் உரையும். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்.
- ஆறுமுக நாவலர் (உ.ஆ.). 2011 (20ஆம் பதிப்பு). திருமுருகாற்றுப்படை மூலமும் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நச்சினார்க்கினியர் உரைக்கருத்தைத் தழுவிச்செய்த புத்துரையும். கனடா: வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம்.
- ஆறுமுக நாவலர் (ப.ஆ.). சுக்கில - வைகாசி (1870). பதினோராந் திருமுறை. சென்னபட்டணம்: வர்த்தமான தரங்கிணி சாகை யச்சுக்கூடம்.
- ஆறுமுகநாவலர் (உ.ஆ.). 2003 (மறு பதிப்பு). திருமுருகாற்றுப்படை விளக்கத்துடன். சென்னை: முல்லை நிலையம்.
- ஆறுமுகம் பிள்ளை. எம். 1927. திருமுருகாற்றுப்படை சிற்றாராய்ச்சி. தஞ்சை: லாலி எலெக்டிரிக் அச்சுக்கூடம்.
- இரத்தினவேலு முதலியார். வாடாவூர். (பதி.ஆ.). 1885 (பார்த்திப மேட ரவி). திருமுருகாற்றுப்படை உரையாளர் பரிமேலழகருரை. சென்னை: ஜீவ ரக்ஷாமிர்த அச்சுக்கூடம்.
- இராசேந்திரன். ப. (உ.ஆ.). 2010 (முதல் பதிப்பு). சங்க இலக்கியம் பத்துப்பாட்டு திருமுருகாற்றுப்படை. சென்னை: கங்கை புத்தக நிலையம்.
- இராஜேந்திரக் குருக்கள். சு. (உ.ஆ,). 1988 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை விளக்கவுரை. நீர்வேலி: அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்.
- கதிர்முருகு (உ.ஆ.). 2009 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு – திருமுருகாற்றுப்படை – பொருநராற்றுப்படை - மூலமும் உரையும். சென்னை: சாரதா பதிப்பகம்.
- கந்தையா. ந.சி. (உ.ஆ.). 2008 (முதல் பதிப்பு). செவ்விலக்கியக் கருவூலம் – பத்துப்பாட்டு. சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

- கந்தையாபிள்ளை. ந.சி.. 1935 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு வசனம். மதராஸ்: ஒற்றுமை ஆபிஸ்.
- காஞ்சி நாகலிங்க முனிவர் (ப.ஆ.). 1934. திருமுருகாற்றுப்படை (இலவச வெளியீடு). துறைசை ஆதினம்: ஸ்ரீ நமச்சிவாய தேசிக மூர்த்திகள்.
- கிருஷ்ணமூர்த்தி. காவூரி ஆர். (உ.ஆ.). 2014 (முதல் பதிப்பு). துன்பங்கள் நீக்கும் திருமுருகாற்றுப்படை (மூலமும் எளிய தமிழ் விளக்கமும்). சென்னை: நர்மதா பதிப்பகம்.
- குமாரசாமித் தம்பிரான். கயிலை. (பதி.ஆ.). 1999 (நான்காம் பதிப்பு). திருமுருகாற்றுப்படை உரைக்கொத்து. திருப்பனந்தாள்: காசித்திருமடம்.
- சண்முகம் பிள்ளை. மு. (ப.ஆ.). 1981 (முதல் பதிப்பு). தெ.பொ.மீ. பத்துப்பாட்டு ஆய்வு (புறம்). மதுரை: சர்வோதய இலக்கியப் பண்ணை.
- சண்முகனார் சுந்தர. (உ.ஆ.). ?. திருமுருகாற்றுப்படை தெளிவுரை. .. .. : புதுவை சிங்கார - குமரேசனாரின் மணிவிழா வெளியீடு.
- சரவணப் பெருமாளையர் (ப.ஆ.). 1834 (சய – ஆவணி). திருமுருகாற்றுப்படை மூலபாடம். சென்னப்பட்டணம்: கல்வி விளக்க அச்சுக்கூடம்.
- சாது சிதம்பரம் சுவாமி (உ.ஆ.). 2001 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் (தெளிபொருள்). சென்னை: சாது சிதம்பரம் சுவாமி.
- சாமிநாதையர். உ.வே. (ப.ஆ.). 1974 (ஏழாம் பதிப்பு). பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும். சென்னை: உ.வே.சா. நூல்நிலையம்.
- சாமிநாதையர். உ.வே. (ப.ஆ.). 1986 (நிழற்படப் பதிப்பு). பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும். தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
- சாமிநாதையர். உ.வே.(ப.ஆ.). 1889 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும். சென்னை: திராவிட ரத்நாகர அச்சுக்கூடம்.
- சாமிநாதையர். உ.வே.(ப.ஆ.). 1918 (இரண்டாம் பதிப்பு). பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும். சென்னை: கமர்சியல் அச்சுக்கூடம்.
- சாமிநாதையர். உ.வே.(ப.ஆ.). 1931 (மூன்றாம் பதிப்பு). பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும். சென்னை: கேஸரி அச்சுக்கூடம்.
- சாமிநாதையர். உ.வே.(ப.ஆ.). 1993 (இரண்டாம் பதிப்பு). பத்துப்பாட்டு மூலம். சென்னை: உ.வே.சா. நூல்நிலையம்.

- சிவஞானம். சாமி. (ப.ஆ.). 2003 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை உரை. தஞ்சாவூர்: சரசுவதி மகால் நூலகம்.
- சீனிவாசன். ம.பெ. (உ.ஆ.). 2009 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை உரைவிளக்கம். மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
- சுதாகர். ம.வீ. (உ.ஆ.). 1990 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும். சென்னை: வர்த்தமானன் பதிப்பகம்.
- சுந்தரமூர்த்தி. இ. (பொ.ப.ஆ.). 2001 (முதல் பதிப்பு). பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பதிப்பித்த சிற்றிலக்கியத் திரட்டு. சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம்.
- சுப்பிரமணியன். ச.வே. (உ.ஆ.). 2003 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு மக்கள் பதிப்பு. கோவிலூர் : கோவிலூர் மடாலயம்.
- சுப்பிரமணியன். ச.வே. (உ.ஆ.). 2010 (இரண்டாம் பதிப்பு). சங்க இலக்கியம் – பத்துப்பாட்டு – முழுவதும் – தெளிவுரை. சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- சுப்பிரமணியன். ச.வே. (ப.ஆ.). 2000 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு மூலம் (சுவடி வேறுபாடுகளுடன்). சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம்.
- சுப்பிரமணியன். ச.வே. (ப.ஆ.). 2008 (முதல் பதிப்பு). தமிழ்ச்செவ்வியல் நூல்கள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- சைவ சித்தாந்த மகாசமாஜம் (ப.ஆ.). 1940 (முதல் பதிப்பு). சங்க இலக்கியம் – எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும். சென்னை: சாது அச்சுக்கூடம்.
- சோமசுந்தரனார். பொ.வே. (உ.ஆ.). 1956 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதல் பகுதி). சென்னை: கழகம்.
- துரை அரங்கசாமி. மொ.அ., 1966 (மூன்றாம் பதிப்பு). அன்புநெறியே தமிழர்நெறி. மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
- துரைசாமி. எஸ். (உ.ஆ.). 1920 (முதல் பதிப்பு). நற்கீரதேவர் திருவாய்மலர்ந்தருளிய திருமுருகாற்றுப்படை பொழிப்புரையும் அரும்பதவிளக்கமும். சென்னை: மனோன்மணி விலாச அச்சுக்கூடம்.
- நக்கீரதேவர். 1922 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை. சென்னை: பூமகள் விலாச அச்சுக்கூடம்.
- நடராசன். பி.ரா. (தொ.ஆ.). 2016 (முதல் பதிப்பு). நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை உரைவளம் (நச்சினார்க்கினியர், இளம்பூரணார் (உரையாசிரியர்), பரிமேலழகர், கவிப்பெருமாள், பரிதியார்). சென்னை: சாரதா பதிப்பகம்.

- நமச்சிவாய இராஜயோகியார். சை.ந.. 1938 (இரண்டாம் பதிப்பு). திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகர் உரையும். சென்னை: சற்குரு புத்தக சாலை.
- நரசிம்மன். வை. மு. (ப.ஆ.). 1961 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு - ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபால கிருஷ்ண மாசாரியரும் அவர் மாணாக்கர் சி. ஜெகநாதாசாரியரும் இயற்றிய ஆராய்ச்சியுரையுடன். சென்னை: வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியர் கம்பெனி.
- நாராயணசாமி. மு. (ப.ஆ). 1969 (நான்காம் பதிப்பு). முருகன் முந்நூல் மூலமும் உரையும். சென்னை: சைவ சித்தாந்த சமாஜம்.
- நாராயணவேலுப்பிள்ளை. எம். (உ.ஆ.). 1995 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும் – முதற் பகுதி. சென்னை: முல்லை நிலையம்.
- நாராயணவேலுப்பிள்ளை. எம். (உ.ஆ.). 2011 (முதல் பதிப்பு). சங்க இலக்கியம் வழங்கும் பத்துப்பாட்டு. சென்னை: நர்மதா பதிப்பகம்.
- பசுபதி. ம.வே. (ப.ஆ.). 2010 (முதல் பதிப்பு). செம்மொழித் தமிழ் – இலக்கண இலக்கியங்கள். தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம்.
- பசுபதி. ம.வே. 2003 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு எளிய உரைநடை. சென்னை: அல்லயன்ஸ்.
- பத்மபிரியா. மா. (உ.ஆ.). 2014 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை. சென்னை: கலைஞன் பதிப்பகம்.
- பார்த்தசாரதி. கோ. (உ.ஆ.). 1992 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை. சென்னை: அநுராகம் வெளியீடு.
- புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). 2013 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை (உதயசூரியன்). எஸ். கௌமாரீஸ்வரி (ப.ஆ.). சென்னை: சாரதா பதிப்பகம்.
- பூமகள் விலாச அச்சுக்கூடம் (பதி.ஆ.). 1922. திருமுருகாற்றுப்படை. சென்னபட்டணம்: பூமகள் விலாச அச்சுக்கூடம்.
- மணி.ஆ. (பதி.ஆ.). 2018 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை மூலமும் ஆறுமுக நாவலர் உரையும். புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.
- மணி.ஆ. (பதி.ஆ.). 2019 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை புத்துரைக் கொத்து. புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.
- மணி.ஆ. (பதி.ஆ.). 2020 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை உரைத்தொகை. புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.
- மணி.ஆ. 2014 (முதல் பதிப்பு). மலைபடுகடாம் – பதிப்பு வரலாறு (1889 – 2013). சென்னை: காவ்யா பதிப்பகம்.

- மனோன்மணி விலாச அச்சுக்கூடம் (பதி.ஆ.). 1910. திருமுருகாற்றுப்படை மூலபாடம். சென்னை: மனோன்மணி விலாச அச்சுக்கூடம்.
- மாணிக்கவாசகன். ஞா. (உ.ஆ.). 2010 (நான்காம் பதிப்பு). பத்துப்பாட்டு மூலம் – விளக்க உரையுடன். சென்னை: உமா பதிப்பகம்.
- மாணிக்கனார். அ. (உ.ஆ.). 1999 (முதல் பதிப்பு). சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் உரையும் – முதல் பாகம். சென்னை: வர்த்தமானன் பதிப்பகம்.
- மீனாட்சி சுந்தரம்பிள்ளை. ஆர். (உ.ஆ.). 1933. திருமுருகாற்றுப்படை - விருத்தியுரையுடன். சென்னை: பூமகள் விலாச அச்சுக்கூடம்.
- முருகேசன். கதி. (உ.ஆ.). 2017 (ஆறாம் பதிப்பு). சங்க இலக்கியம் – பத்துப்பாட்டு மூலமும் உரையும். சென்னை: சாரதா பதிப்பகம்.
- வையாபுரிப் பிள்ளை. எஸ். (தொ.ஆ. & ப.ஆ.). 1967 (இரண்டாம் பதிப்பு). சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்) தொகுதி - 1. சென்னை: பாரி நிலையம்.
- வையாபுரிப்பிள்ளை. எஸ். (உ..ஆ.). 1946 (நான்காம் பதிப்பு). திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும். சென்னை: சைவ சித்தாந்த மகா சமாஜம்.
- ஜகந்நாதன். கி.வா. (உ.ஆ.). 1949 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள் எழுதிய பொழிப்புரையுடன். சென்னை: சைவசமய பக்த ஜனசபை வெளியீடு.
- ஜகந்நாதன். கி.வா. (உ.ஆ.). 1978 (இரண்டாம் பதிப்பு). திருமுருகாற்றுப்படை விளக்கம். சென்னை: அமுத நிலையம்.
- ஜகந்நாதன். கி.வா. (உ.ஆ.). 2004 (ஏழாம் பதிப்பு). வழிகாட்டி. சென்னை: அல்லயன்ஸ் கம்பெனி.
- ஜமதக்னி (உ.ஆ.). 1960?. திருமுருகாற்றுப்படை பொருள்விளக்கமும் விருத்தியுரையும். சென்னை: பி. இரத்தின நாயகர் ஸன்ஸ்.
- ஜெகத்ரட்சகன். எஸ். (உ.ஆ.). 2016 (முதல் பதிப்பு). திருமுருகாற்றுப்படை. சென்னை: ஆழ்வார்கள் ஆய்வு மையம்.


### துணைநூல்கள் (பிற)


- அமிர்தலிங்கம்.சு. 2000 (முதல் பதிப்பு). சங்க இலக்கியக் களஞ்சியம். சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம்.
- அய்யப்பன். கா.. 2009 (முதல் பதிப்பு). செம்மொழித் தமிழ் நூல்களின் பதிப்புரைத் தொகுப்பு. சென்னை: காவ்யா.

- அரவிந்தன். மு.வை.. 2008 (இரண்டாம் பதிப்பு). உரையாசிரியர்கள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- இலக்குமணன் (பதி.ஆ.). பதிப்பு விவரம் கிடைக்கவில்லை.
- இளங்குமரன். இரா. 1991 (முதல் பதிப்பு). சுவடிக்கலை. சேலம் : அரிமாப் பதிப்பகம்.
- இளங்குமரன். இரா.. 2001. சுவடிப் பதிப்பியல் வரலாறு. சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம்.
- கைலாசபிள்ளை த.. 1919 (காலயுத்தி - தை). ஆறுமுக நாவலர் சரித்திரம். சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை.
- சிவகாமி. ச. (பதி.ஆ.). 2009 (முதல் பதிப்பு). சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
- சுப்பராயச் செட்டியார் (பதி.ஆ.). பதிப்பு விவரம் கிடைக்கவில்லை.
- மணி.ஆ. (க.ஆ.). 2017. தமிழ் முத்து. சென்னை: ஆர் அனைத்திந்திய ஆராய்ச்சிக் கழகம்.
- முத்துச்செல்வன். ஆ. (க.ஆ.) 2008 (முதல் பதிப்பு). ஆறுமுக நாவலர். கரு. அழ. குணசேகரன் & த. பூமிநாதன் (பதி.ஆ.). சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
- விசாலாட்சி. ந. 1990 (முதல் பதிப்பு). பழந்தமிழ்ப் பதிப்புகள். சென்னை: சரஸ்வதி பதிப்பகம்.
- வேங்கடசாமி. மயிலை.சீனி. 2012 (முதல் பதிப்பு). பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம். சென்னை: பரிசல் புத்தக நிலையம்.
- ஜானகி. இரா. (தொகு.ஆ.). 2011 (இரண்டாம் பதிப்பு). சங்க இலக்கியப் பதிப்புரைகள். சென்னை: பாரதி புத்தகாலயம்.


குறிப்பு: * இக்குறியீடு அவ்வெண் தமிழெண் வடிவில் தரப்பட்டது என்பதைக் குறிக்கும்.

## பின்னிணைப்பு - 1

### திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களும் உரைகளும் கொண்ட பதிப்புக்கள் / உரைகள்

| வ.எ. | பதிப்பாண்டு | பதிப்பு விவரம் | பதிப்பாசிரியர் / உரையாசிரியர் | நூற்பெயர் |
|---|---|---|---|---|
| 1. | ? | ? | ஜமதக்னி (உ.ஆ.) | திருமுருகாற்றுப்படை -பொருள் விளக்கமும் விருத்தியுரையும் |
| 2. | 1910 | ? | மனோன்மணி விலாச அச்சுக்கூடம் (பதி.ஆ.) | திருமுருகாற்றுப்படை மூலபாடம் |
| 3. | 1922 | ? | பூமகள் விலாச அச்சுக்கூடம் | திருமுருகாற்றுப்படை |
| 4. | 1924 (?) | முதல் பதிப்பு | கை.ந. பாலசுந்தரம் செட்டியார் (பதி.ஆ.), அ. மஹாதேவ செட்டியார் (பரிசோதித்தவர்), பரிமேலழகர் (உ.ஆ.), கோ. வடிவேலு செட்டியார் (தோத்திரப்பா உ.ஆ.). | திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகர் உரையும் (?) |
| 5. | 1933 | ? | ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை (உ.ஆ.) | நக்கீரதேவர் அருளிச் செய்த திருமுருகாற்றுப்படை -விருத்தியுரையுடன் |
| 6. | 1949 | ? | கி.வா. ஜகந்நாதன் (உ.ஆ.) | திருமுருகாற்றுப்படை -திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள் எழுதிய பொழிப்புரையுடன் |
| 7. | 1955 | முதல் பதிப்பு | மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை (பதி.ஆ.), ஸ்ரீமதி சிவானந்தம் தம்பையா (தொகு.ஆ.). | நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை |
| 8. | 1961 | முதல் பதிப்பு | வை.மு. நரசிம்மன் (பதிஆ.), வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியர் & சி. ஜெகநாதாசாரியர் (உ.ஆ.) | பத்துப்பாட்டு |
| 9. | 1970 | முதல் பதிப்பு | கி.வா. ஜகந்நாதன் (உ.ஆ.) | திருமுருகாற்றுப்படை விளக்கம் |
| 10 | 1988 | ? | சு. இராஜேந்திரகுருக்கள் (உ.ஆ.) | நக்கீர முனிவர் பாடியருளிய திருமுருகாற்றுப்படை விளக்கவுரை |
| 11 | 2001 | முதல் பதிப்பு | சாது சிதம்பரம் சுவாமி (உ.ஆ.) | நக்கீரர் அருளிச் செய்த திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் (தெளிபொருள்) |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 2003 | முதல் பதிப்பு | சாமி. சிவஞானம் (உ.ஆ.) | திருமுருகாற்றுப்படை உரை |
| 13 | 2003 | முதல் பதிப்பு | தமிழண்ணல் & சுப. அண்ணாமலை (பதி.ஆ.), ச.வே. சுப்பிரமணியன் (உ.ஆ.). | சங்க இலக்கிய மக்கள் பதிப்பு வரிசை - பத்துப்பாட்டு |
| 14 | 2004 | முதல் பதிப்பு | அ.மா. பரிமணம் & கு.வெ. பாலசுப்பிரமணியன் (பதி.ஆ.), இரா. மோகன் (உ.ஆ.). | பத்துப்பாட்டு - முதற்பகுதி (மூலமும் உரையும்) |
| 15 | 2004 | ஏழாம் பதிப்பு (1947 முதல் பதிப்பு) | கி.வா. ஜகந்நாதன் (உ.ஆ.) | வழிகாட்டி |
| 16 | 2010 | இரண்டாம் பதிப்பு | ச.வே. சுப்பிரமணியன் (உ.ஆ.). | சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு - (முழுவதும்) தெளிவுரை |
| 17 | 2010 | முதல் பதிப்பு | ப. இராசேந்திரன் (உ.ஆ.) | சங்க இலக்கியம் — பத்துப்பாட்டு - திருமுருகாற்றுப்படை |
| 18 | 2014 | முதல் பதிப்பு | மா. பத்மபிரியா (உ.ஆ.) | திருமுருகாற்றுப்படை |
| 19 | 2014 | முதல் பதிப்பு | காவூரி ஆர். கிருஷ்ணமூர்த்தி (உ.ஆ.) | துன்பங்கள் நீக்கும் திருமுருகாற்றுப்படை |
| 20 | 2019 | முதல் பதிப்பு | முத்து. இராமமூர்த்தி (உ.ஆ.) | பத்துப்பாட்டு — திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் |

## பின்னிணைப்பு - 2

## திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்கள் மட்டும் கொண்ட பதிப்புக்கள் / உரைகள் (உரை இல்லாதவை)

| வ.எ | பதிப்பாண்டு | பதிப்பு விவரம் | பதிப்பாசிரியர் / உரையாசிரியர் | நூற்பெயர் |
|---|---|---|---|---|
| 1. | 1853 | முதல் பதிப்பு | ஆறுமுக நாவலர் (உ.ஆ.). ஏழு வெண்பாக்கள் மட்டும். | திருமுருகாற்றுப்படை |
| 2. | 1889 | முதல் பதிப்பு | உ.வே. சாமிநாதையர் (பதி.ஆ.). பிற்பதிப்புக்களிலும் பத்து வெண்பாக்கள் உண்டு. | பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | 1927 | ? | எம். ஆறுமுகம் பிள்ளை (பதிஆ.). | திருமுருகாற்றுப்படை சிற்றாராய்ச்சி |
| 4. | 1934 | ? | காஞ்சி நாகலிங்க முனிவர் (பதி.ஆ.) | திருமுருகாற்றுப்படை |
| 5. | 1940 | ? | சைவசித்தாந்த மகாசமாஜம் (பதி.ஆ.) | சங்க இலக்கியம் - எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் |
| 6. | 1946 | நான்காம் பதிப்பு | க. அரங்கசாமி (பதி.ஆ.), வையாபுரிப்பிள்ளை (உ.ஆ.). | திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் |
| 7. | 1951 | மூன்றாம் பதிப்பு | வை.மு. கோபாலகிருய்யிணமாசாரியார் (உ.ஆ. & பதி.ஆ.). | திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரையுடன் |
| 8. | 1955 | முதல் பதிப்பு | பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.) | பத்துப்பாட்டு வரிசை — 1, திருமுருகாற்றுப்படை |
| 9. | 1967 | இரண்டாம் பதிப்பு | எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.ஆ.) | சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்) |
| 10. | 1969 | நான்காம் பதிப்பு | மு. நாராயணசாமி (பதி.ஆ.), வையாபுரிப்பிள்ளை முதலானோர் (உ.ஆ.). | முருகன் முந்நூல் மூலமும் உரையும் |
| 11. | 1971 | முதல் பதிப்பு | ஆறுமுக நாவலர் (உ.ஆ.). பத்து வெண்பாக்களும். | நக்கீரதேவநாயனார் அருளிச்செய்த திருமுருகாற்றுப்படை மூலமும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் உரையும் |
| 12. | 1978 | முதல் பதிப்பு | வை. அநவரதவிநாயகமூர்த்தி (உ.ஆ.) | நக்கீரர் தந்த நன்முருகாற்றுப்படை |
| 13. | 1981 | இரண்டாம் பதிப்பு | ஆசிரியர் குழு (பதி.ஆ.). | பத்துப்பாட்டு |
| 14. | 1981 | முதல் பதிப்பு | மு.சண்முகம் பிள்ளை (பதி.ஆ.). | பத்துப்பாட்டு ஆய்வு |
| 15. | 1992 | முதல் பதிப்பு | .. .. | நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை பாட்டும் உரையும் |
| 16. | 1992 | முதல் பதிப்பு | கோ. பார்த்தசாரதி (உ.ஆ.) | பத்துப்பாட்டு வரிசை — திருமுருகு ஆற்றுப்படை |

| | | | | |
|---|---|---|---|---|
| 17. | 1993 | இரண்டாம் பதிப்பு | உ.வே. சாமிநாதையர் (பதி.ஆ.) | பத்துப்பாட்டு மூலம் |
| 18. | 1995 | முதல் பதிப்பு | எம். நாராயணவேலுப்பிள்ளை (உ.ஆ.) | பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும் - முதற்பகுதி |
| 19. | 1999 | நான்காம் பதிப்பு | கயிலை குமாரசாமித் தம்பிரான் (பதி.ஆ.), பழையவுரையாசிரியர் ஐவர் உரைகளும் | திருமுருகாற்றுப்படை உரைக்கொத்து |
| 20. | 2001 | முதல் பதிப்பு | இ. சுந்தரமூர்த்தி (பதிஆ.) உரையாசிரியர் (உ.ஆ.) | பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பதிப்பித்த சிற்றிலக்கியத் திரட்டு |
| 21. | 2001 | முதல் பதிப்பு | இ. சுந்தரமூர்த்தி (பதிஆ.) வையாபுரிப்பிள்ளை (உ.ஆ.) | பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பதிப்பித்த சிற்றிலக்கியத் திரட்டு |
| 22. | 2003 | மறுபதிப்பு | ஆறுமுகநாவலர் (உ.ஆ.) | திருமுருகாற்றுப்படை விளக்கத்துடன் |
| 23. | 2008 | முதல் பதிப்பு | ச.வே. சுப்பிரமணியன் (பதி. ஆ.). | தமிழ்ச்செவ்வியல் நூல்கள் |
| 24. | 2008 | முதல் பதிப்பு | ந.சி. கந்தையா பிள்ளை (உ.ஆ.), இரா. இளங்குமரனார் & பி. தமிழகன் (பதி.ஆ.). | செவ்விலக்கியக் கருவூலம் - (சங்க இலக்கியம்) - பத்துப்பாட்டு |
| 25. | 2009 | முதல் பதிப்பு | ம.பெ.சீனிவாசன் (உ.ஆ.) | திருமுருகாற்றுப்படை உரை விளக்கம் |
| 26. | 2011 | ? | எம். நாராயணவேலுப்பிள்ளை | சங்க இலக்கியம் வழங்கும் பத்துப்பாட்டு |
| 27. | 2011 | 20ஆம் பதிப்பு | ஆறுமுக நாவலர் (உ.ஆ.). பத்து வெண்பாக்களும். | திருமுருகாற்றுப்படை மூலமும் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நச்சினார்க்கினியர் உரைக்கருத்தைத் தழுவிச்செய்த புத்துரையும் |

| | | | | |
|---|---|---|---|---|
| 28. | 2016 | முதல் பதிப்பு | பி.ரா. நடராசன் (பதி.ஆ.) பழையவுரையாசிரியர் ஐவர் உரைகளும் | திருமுருகாற்றுப்படை உரைவளம் |
| 29. | 2018 | முதல் பதிப்பு | ஆ. மணி (பதி.ஆ.). நாவலர் உரையில் ஏழு வெண்பாக்கள் உள. | திருமுருகாற்றுப்படை மூலமும் ஆறுமுக நாவலர் உரையும் |
| 30. | 2019 | முதல் பதிப்பு | ஆ. மணி (பதி.ஆ.). நாவலர் உரையில் ஏழு வெண்பாக்கள் உள. | திருமுருகாற்றுப்படை புத்துரைக்கொத்து |
| 31. | 2020 | முதல் பதிப்பு | ஆ. மணி (பதி.ஆ.) | திருமுருகாற்றுப்படை உரைத்தொகை (பழையவுரைகள் மட்டும்) |

## பின்னிணைப்பு - 3

### திருமுருகாற்றுப்படைத் தனி வெண்பாக்களும் உரையும் இல்லாத பதிப்புக்கள் / உரைகள்

| வ.எ | பதிப்பாண்டு | பதிப்பு விவரம் | பதிப்பாசிரியர் / உரையாசிரியர் | நூற்பெயர் |
|---|---|---|---|---|
| 1. | ? | விவரம் இல்லை. ஆனால், முதல் பதிப்பன்று. | திருமயிலைச் செந்தில்வேலு முதலியார் (பதி.ஆ.), சரவணப்பெருமாள் ஐயர் (உ.ஆ.).+ | நக்கீரதேவர் அருளிச் செய்த திருமுருகாற்றுப்படை இஃது திருத்தணிகை சரவணப்பெருமாளையர வர்கள் பதவுரையுடன் |
| 2. | ? | முதல் பதிப்பு | சுப்பராயச் செட்டியார் (பதி.ஆ.), நச்சினார்க்கினியர் (உ.ஆ.). | நூற்பெயர் விவரம் தெரியவில்லை. |
| 3. | ? | ? | சுந்தர சண்முகனார் (உ.ஆ.) | திருமுருகாற்றுப்படை பாட்டும் உரையும் |
| 4. | 1839 (?) | முதல் பதிப்பு | அ. இலக்குமணன் (பதி.ஆ.) | நூற்பெயர் விவரம் தெரியவில்லை. |
| 5. | 1885 | முதல் பதிப்பு | வாடாவூர் இரத்தினவேலு முதலியார் (பதி.ஆ.). | நக்கீரனார் அருளிச்செய்த திருமுருகாற்றுப்படைக்கு உரையாளர் பரிமேலழகருரை |
| 6. | 1920 | முதல் பதிப்பு | எஸ். துரைசாமி ஐயர் (உ.ஆ.)+ | நற்கீரதேவர் திருவாய்மலர்ந்தருளிய திருமுருகாற்றுப்படை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பொழிப்புரையும் அரும்பத விளக்கமும் |
| 7. | 1966 | மூன்றாம் பதிப்பு | மொ.அ.துரை அரங்கசாமி (உ.ஆ.) | அன்புநெறியே தமிழர்நெறி |
| 8. | 1999 | முதல் பதிப்பு | ம.வீ. சுதாகர் (உ.ஆ.). | பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும் |
| 9. | 2009 | முதல் பதிப்பு | கதிர் முருகு | பத்துப்பாட்டு திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை |
| 10. | 2010 | நான்காம் பதிப்பு | ஞா. மாணிக்கவாசகன் (உ.ஆ.) | பத்துப்பாட்டு மூலம் — விளக்க உரையுடன் |
| 11. | 2010 | முதல் பதிப்பு | ம.வே. பசுபதி (உ.ஆ.) | செம்மொழித் தமிழ் — இலக்கண இலக்கியங்கள் |
| 12. | 2013 | முதல் பதிப்பு | புலியூர்க்கேசிகன் (உ.ஆ.), எஸ். கௌமாரீஸ்வரி (பதி.ஆ.) | திருமுருகாற்றுப்படை (உதயசூரியன்) |
| 13. | 2016 | முதல் பதிப்பு | எஸ். ஜெகத்ரட்சகன் (உ.ஆ.) | திருமுருகாற்றுப்படை |
| 14. | 2019 | முதல் பதிப்பு | ஆ.மணி (பதி.ஆ.), சரவணப்பெருமாள் ஐயர் (உ.ஆ.).+ | திருமுருகாற்றுப்படை : சரவணப்பெருமாள் பதவுரையும் உரைப்பாங்கும் |

+ இக்குறியீடு அப்பதிப்பில் ஒருமுருகா எனத் தொடங்கும் வெண்பா ஒன்று மட்டுமே உள்ளது என்பதைக் குறிக்கும்.

****